Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

காதல் மற்றும் உறவுகளின் உணர்வுப்பூர்வமான கொண்டாட்டமாக வெளியான 'ஹைக்கூ' திரைப்படம் நவம்பர் 20 அன்று நெட்ஃபிலிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகிறது!

சென்னை – 19 நவம்பர், 2026 அதிகம் கொண்டாடப்பட்ட காதல் திரைப்படங்களில் ஒன்று. இத்திரைப்படம் வரும் வெள்ளிக்கிழமை (நவம்பர் 20) நெட்ஃபிலிக்ஸ் தளத்தில் டிஜிட்டல் பிரீமியராக வெளியாகிறது. யுவராஜ் சின்னசாமி இயக்கியுள்ள இப்படத்தை விஷன் சினிமா ஹவுஸ் நிறுவனம் சார்பில் டாக்டர் டி. அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து ஆகியோர் தயாரித்துள்ளனர். படப்பிடிப்பு நிறைவடைவதற்கு முன்பே இப்படத்தின் திரையரங்க வெளியீட்டுக்குப் பிந்தைய ஓடிடி உரிமையை நெட்ஃபிலிக்ஸ் நிறுவனம் கைப்பற்றியிருந்தது. படம் குறித்து நடிகர் ஏகன் பகிர்ந்து கொண்டதாவது, "'ஹைக்கூ' திரைப்படத்துக்கு பலதரப்பட்ட ரசிகர்களிடம் இருந்து கிடைத்த வரவேற்பு எங்களை நெகிழ செய்தது. உறவுகளையும் உணர்வுகளையும் மையமாகக் கொண்ட ஒரு திரைப்படம் ரசிகர்களிடம் எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற சந்தேகம் ஆரம்பத்தில் எங்களுக்கு இருந்தது. ஆனால், திரையரங்குகளுக்குச் சென்றபோது வயதானவர்கள்கூட இப்படத்துடன் தங்களை தொடர்புபடுத்தி பாராட்டியது மகிழ்ச்சியளித்தது. தற்போது நெட்ஃபிலிக்ஸ் மூலம் ஹைக்கூ திரைப்படம் இன்னும் அதிகமான ரசிகர்களைச் சென்றடைவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கள் திரைப்படத்தின் மீது நம்பிக்கை வைத்து, உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களிடம் கொண்டு சேர்க்கும் நெட்ஃபிலிக்ஸ் தளத்துக்கு எனது மனமார்ந்த நன்றி" என்றார்.

தயாரிப்பாளர்கள் டாக்டர் டி. அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து கூறுகையில், "ஹைக்கூ திரைப்படம் எங்களுக்கு மகிழ்ச்சியான மனநிறைவான அனுபவம் தந்தது. இப்படத்தின் உலகளாவிய டிஜிட்டல் வெளியீட்டுக்காக நெட்ஃபிலிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். திரையரங்குகளில் படம் வெளியான பிறகு இப்படத்தைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்காத பல்வேறு நாடுகளில் வசிக்கும் தமிழ்த் திரைப்பட ரசிகர்களிடமிருந்து ஏராளமான கோரிக்கைகள் வந்தன. தற்போது அவர்கள் எங்கிருந்தாலும், சிறந்த ஒளி மற்றும் ஒலி தரத்தில் இப்படத்தை ரசிக்கும் வாய்ப்பை நெட்ஃபிலிக்ஸ் ஓடிடி தளம் மூலம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதில் மகிழ்ச்சி" என்றனர்.



அக்டோபர் 23 ஆம் தேதி உலகம் முழுவதும் வெளியான 'ஹைக்கூ' திரைப்படம் விமர்சகர்கள் மற்றும் ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்றது. நுட்பமான திரைக்கதை, உணர்வுகளை இயல்பாக வெளிப்படுத்திய கதைக்களம் மற்றும் சித்து குமாரின் மனதை வருடும் இசை ஆகியவை என 'ஹைக்கூ' திரைப்படத்தை வரும் நவம்பர் 20 அன்று நெட்ஃபிலிக்ஸ் தளத்திலும் ரசிக்கலாம்.